கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 136/2024

வா.சா.1 - சரஸ்வதி

நாள். 04.02..2026 க/பெ - லிங்கத்துரை

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) வா.சா.ஆ. 4 உயிலின் அசல் ஆசணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், எனது தாயாரிடம் தான் இருந்தது. எனது தாயார் எப்போது காலமானார் என்றால் 2021ம் வருடம் காலமானார். மேற்படி உயில் ஆவணம் தற்போது யாரிடம் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. வா.சா.ஆ. 4 அசல் ஆவணமானது 1ம் பிரதிவாதி வசம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தில் யார் யாருக்கு எவ்வளவு பாகம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் 5 சென்ட்-ல் 1 சென்ட் மட்டும் எனது தாயாருக்கும், மீதமுள்ள 4 சென்ட் நிலமானது பொன்செல்வன், சரஸ்வதி மற்றும் பாக்கியத்தாய் அவர்களுக்கு என சொல்லப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 4 உயில் ஆவணத்தில் எனது ஆயுளுக்கு பின் எனது வாரிசுகளான பாப்பாத்தி, பொன்செல்வன், சரஸ்வதி, பாக்கியதாய் இவர்கள் சர்வ சுதந்திரமாய் தபசில் சொத்தை அனுபவத்து கொள்வது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது தாத்தா பொன்னுசாமி நாடார் எப்போது இறந்தார் என்றால் 2006 ம் வருடம் இறந்து விட்டார். எனது தாத்தா இறந்த பின்னர் உயில் ஆவணத்தை சுட்டிக்காட்டி பாகபிரிவினை செய்ய வேண்டி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அறிவிப்பு அனுப்ப வில்லை, ஆனால் பாகபிரிவினை செய்ய வேண்டி எனது சகோதரரிடம் கேட்டேன்.

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.04 15:52:25 +0530

MITHUNA A KAISER

2)	வா.சா.ஆ. 4 உயில் ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள மார்த்தாண்டம் மற்றும் ராசையா இறந்து விட்டனர் என்றால் சரிதான். மேற்படி மார்த்தாண்டம் எப்போது இறந்தார் என்றால் 2025 -ல் தான் இறந்தார். ராசையா நாடார் எப்போது இறந்தார் என்றால் எனது தாத்தா இறப்பதற்கு முன்னரே ராசையா நாடார் இறந்து விட்டார். உயில் மூலமாக நான் உரிமை கோரும் பட்சத்தில் சாட்சிகளை விசாரிக்க வேண்டும் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான்.

3)	2006 முதல் இன்று வரை மேற்படி உயில் ஆவணத்தை சுட்டிக் காட்டி வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தபசில் சொத்து 4 சென்டை பொறுத்து 1ம் பிரதிவாதி அவரது மனைவியான 2 ம் பிரதிவாதி பெயருக்கு 25.07.2018 அன்று செட்டில் மென்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பின்னர் 2 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கும் 2 சென்ட் நிலத்தை கிரையம் செய்து விட்டார் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான், ஆனால் தடங்கல் மனு கொடுத்திருந்தேன். மேற்படி தடங்கல் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வில்லை என்றால் சரிதான். மேற்படி 2 சொத்துகள் மாற்றமும் எனக்கும் எனது சகோதரிக்கும் தெரிந்தே தான் நடைபெற்றது அதற்கு நாங்கள் சம்மதம் தெரிவித்தோம் என்றால் சரியல்ல.

4)	மேற்படி 2 சென்டை கிரையம் பெற்ற 3 ம் பிரதிவாதி காம்ப்வுண்ட் அமைத்து 2 சென்ட் நிலத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான், ஆனால் காம்ப்வுண்ட் சுவர் அமைக்கும் போது வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லி நான் அதை தடுத்தேன். நான் 3 ம் பிரதிவாதி மீது தடையுறுத்து கட்டளை கேட்டு தனியாக மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.04 15:52:30 +0530

5) எனது தாயார் பாப்பாத்தி வா.சா.ஆ. 4 உயில் தொடர்பாக சொத்துரிமை கேட்டு வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். எனது தாயார் தாக்கல் செய்த வழக்கின் எண் விபரம் என்ன என்றால் வழக்கு எண் ஞாபகம் இல்லை, ஆனால் விபரங்கள் வீட்டில் உள்ளது. மேற்படி வழக்கின் ஆவணங்களை தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். நான் சாட்சியம் அளிப்பது போல் எனது தாயார் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) எனது தாத்தா பொன்னுச்சாமி உயிலில் சொல்லியுள்ளது போல் தபசில் சொத்தில் 1 சென்ட் நிலம் மட்டும் எனது தாயாருக்கு கொடுக்கப்பட்டதாக கூறியதன் பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்தது இல்லை. எனது தாயாருக்கு கொடுக்கப்பட்டதாக கூறும் 1 சென்ட் நிலத்திற்கு உரிய வீட்டு வரி ரசீதோ, மின் இணைப்பு ரசீதோ நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை, ஆனால் எனது தாயார் பெயரில் உள்ள பட்டாவை பார்த்துள்ளேன். எனது தாயார் பெயருக்கு தனி பட்டா எதுவும் வழங்க படவில்லை என்றால் சரிதான்.

7) எப்போது கூட்டு பட்டாவில் எனது பெயரை சேர்த்தேன் என்றால் 2023 க்கு பிறகு சேர்த்தேன். 1ம் பிரதிவாதி மற்றும் 2ம் பிரதிவாதி பெயரில் 2018 -ல் தனி பட்டா உள்ளது என்றால் சரிதான். 3ம் பிரதிவாதியிடம் வா.சா.ஆ. 4 உயிலை காட்டி ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். என்னிடம் அசல் உயில் சாசனம் இல்லாத பட்சத்தில் 3ம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை தெரிவிக்க வில்லை என்றால் சரியல்ல. 1991-ம் ஆண்டு எனது தாத்தா பொன்னுச்சாமி நாடார் தபசில் சொத்து 4 சென்ட்- ஐ பொறுத்து மட்டும் எனது சகோதரர் 1ம் பிரதிவாதி பொன் செல்வன் என்பவருக்கு உயில் சாசனம்


MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.04 15:52:34 +0530

எழுதி' கொடுத்து விட்டார் என்றும், தபசில் சொத்தில் 1 சென்ட்-ஐ மட்டும் எனது தாயார் பாப்பாத்திக்கு ஏற்கனவே வாய்மொழி செட்டில் மென்ட் கொடுத்து விட்டார் என்றும், மேற்படி இருவரும் காலம் சென்ற பின்னர் உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்து தபசில் சொத்தின் முழு அனுபவமும் 2 ம் பிரதிவாதி வசம் இருந்து வந்தது என்றால் சரியல்ல.

8) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 4 உயில் ஆவணம் போலி ஆவணம் என்றாலும், எனது தாத்தா வா.சா.ஆ. 4 உயில் ஆவணத்தை எழுத வில்லை என்றாலும் சரியல்ல. எனது தாத்தா இறந்தததிலிருந்து 20 வருடங்கள் பிரதிவாதிகளின் அனுபவத்திற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரி பாக்கியதாய் வழக்கு சொத்தில் எந்த பங்கும் கோரவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தைப் பொறுத்த வரை தற்போது 2, 3 ம் பிரதிவாதிகள் உண்மையான உரிமையாளர்கள் ஆவார்கள், எனக்கு தபசில் சொத்தை பொறுத்து எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதிக்கு தபசில் சொத்தில் 2 சென்ட் நிலத்தை பொறுத்து உரிமையும், அனுபவமும் சென்று விட்டதால் சுவாதீன பரிகாரம் கேட்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது ஏற்புடையது அல்ல என்றாலும், நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் குறையுடையது என்றாலும் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது )

மறுவிசாரணை - இல்லை.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.04 15:52:38 +0530